# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2016 - 2017

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:..................................................................... நேரம்: 120 மணித்துளிகள்

www.tamiledc.com

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. தமிழின் முதன்மையான இலக்கணநூல் எனக் கூறப்படுவது ________________ .

   ( நன்னூல், தொல்காப்பியம், இலக்கணச்சுருக்கம் )

2. கற்கக் கற்கப் பெருகுவது ________________ .

   ( அறிவு, அன்பு, அழகு )

3. சிற்றுண்டிகளில் ஒன்று ________________ .

   ( அப்பம், வடை, பொங்கல் )

4. நண்பர்கள் தவறு செய்தால் ________________ க் கொள்ள வேண்டும்.

   ( பொறுத்து, வெறுத்து, விலக்கி )

5. தமிழரின் தாயகங்களில் ஒன்று ________________ .

   ( மலேசியா, சிங்கப்பூர், ஈழம் )

6. இடுக்கண் என்ற சொல் குறித்து நிற்பது ________________ .

   ( துன்பத்தை, இன்பத்தை, புகழை )

7. பின்வருவனவற்றுள் முக்கனிகள் எனப்படுபவை

   ________________ .

   ( வாழை கொய்யா பலா, மா பலா வாழை, மா நெல்லி வாழை )

8. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி எனத் தொடங்குவது

   ________________ .

   ( திருக்குறள், நாலடியார், மூதுரை )

9. முன்னாளில் திருமண விழாக்களில் ______________________

கொட்டியது.

( மணமுரசு, போர்முரசு, படைமுரசு )

10. கரையில்லாதது என நாலடியார் கூறுவது __________________ .

( செல்வத்தை, கல்வியை, அன்பை )

11. **பழமொழி :-**

பழகப்பழகப் __________________________ புளிக்கும்.

( தேனும், பாலும், நீரும் )

12. காட்டரசனாக வாழ்ந்த விலங்கு __________________________ .

( நரி, சிங்கம், யானை )

13. **நொடி :-**

இரவெல்லாம் பூங்காடு பகலெல்லாம் வெறுங்காடு.

அது __________________________ .

( வானம், நிலா, விண்மீன் )

14. மடல் என்ற சொல் குறிப்பது __________________________ .

( அஞ்சலை, நூலை, ஏட்டை )

15. முத்தமிழில் ஒன்று __________________________ .

( ஓவியம், நடனம், நாடகம் )

16. விழாக்கள் __________________________ வளர்க்கின்றன.

( வேற்றுமையை, ஒற்றுமையை, பகையை )

17. **ஒலிவட்டு :-**

நாடுகாத்த சிறுவன் என அழைக்கப்பட்ட பிரிங்கர்

____________________ நாட்டைச் சேர்ந்தவன்.

( ஒல்லாந்து, பிரித்தானியா, இத்தாலி )

18. உயிர் எழுத்துகள் ____________________ .

( 30, 12, 18 )

19. கங்காரு ______________ குட்டியை வயிற்றுப்பையில்

காவிச் செல்லும்.

( தனது, உனது, எனது )

20. பசுமையான புல்வெளியில் மாடுகள் __________________ .

( மேய்கின்றது, மேய்கின்றன, மேய்கின்றனர் )

21. இங்கே பல நூல்கள் உள்ளன.

____________________ ஒன்றை நீ தேர்ந்து எடு.

( ஒவ்வொன்றும், இவற்றுள், அவற்றுள் )

22 பழந்தமிழர் தோற்கருவிகளின் ____________________

நன்கு அறிந்திருந்தனர்.

( நுணுக்கங்களை, நுணுக்கங்களுக்கு, நுணுக்கங்களால் )

23. நள்ளிரவு என்பது ____________________ .

( நண்பகல், நடுஇரவு, இரவு )

24. வாழ்க்கையில் ______________________ மாறிமாறி வரும்.

( இன்பதுன்பம், உள்ளும்புறமும், ஊண்உறக்கம் )

25. நாளை நடைபெறும் ஓவியப் போட்டியில் செல்வன் ஓவியம்

______________________ .

( வரைவான், வரைகின்றான், வரைந்தான் )

26. பெரியப்பா கடுஞ்சினத்தால் பற்களை ______________

எனக் கடித்தார்.

( குறுகுறு, நறநற, விறுவிறு )

27. தமிழுக்குரிய சிறப்பு எழுத்து ______________________ .

( ல, ள, ழ )

28. **800** என்ற எண்ணை எழுத்தில் எழுதினால்

______________________ .

( எண்ணூறு, என்னூறு, எண்நூறு )

29. என் தங்கை பாட்டுப் ______________________ .

( பாடுவாள், ஆடுவாள், நடிப்பாள் )

30. யாழ் ______________________ வகையைச் சேர்ந்த

இசைக்கருவியாகும்.

( தோற்கருவி, நரம்புக்கருவி, துளைக்கருவி )

புள்ளிகள் 30

## 2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| ஊண்உறக்கம் | படிப்படியாக | பார்க்கப்பார்க்க |
| மணிமணியாக | மெல்லமெல்ல | |

1. எனது தம்பியின் கையெழுத்து ______________________ இருக்கின்றது.

2. புவியின் வெப்பம் ______________________ அதிகரித்துச் செல்கின்றது.

3. பிள்ளைகளுக்காகப் பெற்றோர்______________ இன்றி வேலை செய்கின்றனர்.

4. காலில் அடிபட்டதால் எழிலி ______________________ நடந்து பள்ளிக்குச் சென்றாள்.

5. பூங்காவில் உள்ள பல வண்ணப் பூக்களைப் ______________________ அழகாக இருக்கின்றன.

புள்ளிகள் 05

**3) கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. யாழ் இசைப்போரைப் பாணர் என

   ______________________________ .

2. தெருவில் விற்கும் உணவை வாங்கி உண்ணக்

   ______________________________ .

3. நல்வழி ஔவையாரால் ______________________________ .

4. நேற்று நடந்த முத்தமிழ் விழாவில் இனியன் நாடகம்

   ______________________________ .

5. கோடை காலத்தில் பறவைகளின் ஒலி

   ______________________________ .

| புள்ளிகள் 10 |
|---|

4) **பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

மழை எமது வாழ்க்கைக்கு மிகவும் தேவையானது. மழை இல்லையென்றால் எமக்கு நீர் கிடைக்காது. உழவுத்தொழில் மூலம் எமக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொள்கின்றோம். உழவுத்தொழிலுக்கு நீர் வேண்டும். மழை பெய்யவில்லை என்றால் நிலம் வரண்டு காய்ந்து விடும். வரண்ட நிலத்தில் நிலைத்திணைகள் வளரமுடியாது. விலங்குகளும் நீர் இல்லாவிட்டால் இறந்து விடும். உலகத்திலுள்ள அனைத்து உயிர்களுக்கும் நீர் இன்றியமையாதது. அத்தகைய நீர் எமக்கு மழையின் மூலமே கிடைக்கின்றது. மழை பெய்வதற்குக் கரணியமானவன் கதிரவன். அதனால்தான் தமிழர் தை முதலாம் நாளைக் கதிரவனுக்கு நன்றி கூறும் தைப்பொங்கல் நாளாகக் கொண்டாடுகின்றனர்.

1. எமது வாழ்க்கைக்கு எது தேவையானது?

______________________________

2. எத்தொழிலுக்கு நீர் வேண்டும்?

______________________________

3. வரண்ட நிலத்தில் எவை வளரமுடியாது?

______________________________

4. எவற்றிற்கு நீர் இன்றியமையாதது?

______________________________

5. மழை கிடைப்பதற்குக் கரணியமானவன் யார்?

______________________________

புள்ளிகள் 10

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| திருக்குறள் | உயர்வு | நட்பு |
| கேடு | நல்ல | |

நட்பு அறிதல் என்பது ஒருவர் தாம் நட்புக்கொள்ள விரும்புபவரைப்பற்றி அறிவதாகும். அவருடைய குணநலன்களை அறிந்து ________________ க் கொள்ள வேண்டும். உண்மையான நண்பர்களின் நட்பே எமக்கு உயர்வைத் தரும். நல்ல நண்பர்களை எமக்குக் ________________ விளைகின்ற காலத்தில் அறியலாம். நாம் அறிந்தோ அறியாமலோ தவறு செய்யும்போது கண்டித்து அறிவுரைப்பவர்களே ________________ நண்பர்கள். தமிழ் இலக்கியங்களில் உயர்ந்த நட்புப்பற்றி நிறையச் சொல்லப்படுகிறது. வாழ்க்கை வழிகாட்டியான ________________ நட்பைப்பற்றிக் கூறுகிறது. அறநூல்களில் ஒன்றான நாலடியாரிலும் நட்பின் ________________ பற்றிக் கூறப்பட்டுள்ளது.

புள்ளிகள் 10

6) **பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. பாலிலுள்ள நீர்த்தன்மையைப் பிரித்து பாலை மட்டும் உண்ணும் பறவை எது?

2. தோற்கருவிகளின் இசையெழுப்பும் பகுதி எதனால் ஆக்கப்பட்டிருக்கும்?

3. தமிழர் கொண்டாட்டங்களில் மிகச்சிறந்தவை எவை?

4. நல்ல பண்புள்ள மாந்தனை உருவாக்குவது எது?

5. ஆடிப்பிறப்பின் சிறப்பான நிகழ்வு எது?

புள்ளிகள் 10

## 7) பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| பழக | கடந்து | செய்து |
| ஆல | மறக்க | |

1. அம்மா வீட்டு வேலைகளைச் ________________ முடித்தார்.

2. நாங்கள் நல்ல பழக்கங்களைப் ________________ வேண்டும்.

3. நண்பர்கள் ஆற்றைக் ________________ சென்றனர்.

4. நாம் ஒருவர் செய்த நன்றியை ________________ க் கூடாது.

5. கார்முகிலைக் கண்டால் மயில் ________________ த் தொடங்கும்.


புள்ளிகள் 05

## 8) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிட மொழியில் எழுதுக.

1. தேர்வு ________________
2. காகம் ________________
3. கதிரவன் ________________
4. மரம் ________________
5. மிளகாய் ________________

புள்ளிகள் 05

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.



புள்ளிகள் 15